**OPEN ACCESS**

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.05.2020

Accepted: 25.06.2020

Published: 01.07.2020

Citation:
Bama, P. (2020). MV Social Perspective in MV.Venkatram Stories. *Shanlax International Journal of Tamil Research*, 5(1), 157–162.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.3408

*Corresponding Author:
ktsjegadha@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# MV Social Perspective in MV.Venkatram Stories

**Dr. P. Bama**

*Principal, Thiruvalluvar University College of Arts and Sciences*
*Constituent College, Attuppakkam, Arakkonam, Ranipet, Tamil Nadu, India*

https://orcid.org/0000-0003-0172-349X

**Abstract -** A community is a group of people living in a vast area fulfilling all their needs. Its noble purpose is to make the crowd live happily and orderly. Every common man should be well aware of political implications, economic issues, and scientific advances.

The society needs to acquire knowledge in the above fields to prosper. After the birth of man, the individual becomes one with the society only by being subjected to the constructive plans of the society while doing many actions by the power of innumerable individuals like him. Societal elements are divided into five categories: family, government, education, language, and religion. Only when all these work together unselfishly can the social purpose be fully successful.

**Key Words:** Tamil Short Story, M.V. Venkatram Short Stories, Varnapetam, Evil Nature.

**References**

1. Venkatraman. MV, Stories – Manamum Maranamum, P.350.
2. Venkatraman. MV, Stories – Kanappu, P.42.
3. Venkatraman. Stories – Velaikari Thoongukiral Nayum Thoongukirathu, P.746.
4. Venkatraman. MV, Stories – Paithiyakkara Pillai, P.575.
5. Meenakshi Murugan's Kalkiyin Sirukathai Kalai, P.74.

# எம்.வி. வெங்கட்ராம் கதைகளில் சமுதாய நோக்கு

*முனைவர் ப. பாமா*
முதல்வர், திருவள்ளுவர் பல்கலைக்கழகக் கலை (ம) அறிவியல் உறுப்புக் கல்லூரி,
ஆட்டுப்பாக்கம், அரக்கோணம்

***ஆய்வுச்சுருக்கம்:*** *ஒரு பரந்த நிலப்பரப்பில் தங்களுடைய அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொண்டு வாழுகின்ற மக்கள் கூட்டமே சமுதாயம் நோக்கம் எனப்படும். அதனுடைய மக்கள் கூட்டம் மகிழ்ச்சியுடனும் ஒழுங்குடனும் வாழ்வதாகும். ஒவ்வொரு சராசரி மனிதனும் அரசியல் விளைவுகள், பொருளியல் சிக்கல்கள், அறிவியல் முன்னேற்றங்கள் எனும் இவற்றை அறிந்துகொள்ள வேண்டும். சமுதாயம் வளம் பெற்றிட மேற்கண்ட துறைகளில் அறிவுபெற வேண்டும். மனிதன் பிறந்த பின்னர் அவனைப் போன்ற எண்ணற்ற தனிமனிதர்களின் சக்தியால் பல செயல் திட்டங்களைச் செய்யும் போதுச் சமுதாயத்தின் கட்டுத்திட்டங்களுக்கு உட்படுத்துவதன் மூலம்தான் தனிமனிதன் சமுதாயத்துடன் ஒன்றுகிறான். குடும்பம், அரசு, கல்வி, மொழி, சமயம் என ஐவகையாகச் சமுதாயச் கூறுகள் பாகுபடுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தும் ஒன்றுபட்டுத் தன்னலமின்றிச் செயல்படும் போதுதான் சமுதாய நோக்கம் முழுமையான வெற்றியைப் பெறுகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ்ச் சிறு கதைகள், எம். வி. வெங்கட்ராமன், சிறுகதைகள், வர்ணாபேதம், தீய இயற்கை*

### பெண்களின் நிலை

வெங்கட்ராம் கதைகளில் காணப்படும் பெண்கள் பெண்மையைப் போற்றுபவர்களாகவும் ஒழுக்க நெறியுடையவர்களாகவும் சுருங்கக்கூறின் சமுதாய நோக்கம் சிறப்படைய முக்கிய பங்கு வகிக்கின்றவர்களாகவும் இருக்கிறார்கள். ஒரு சில கதைகளில் தீயஇயல்பு உடையவர்கள் காணப்பட்டாலும் இறுதியில் மாற்றமடைகின்றனர். சாவித்திரி என்ற சிறுகதையில் வயதாகியும் திருமணம் ஆகாமல் காத்திருக்கும் பெண்கள் இருக்கும் சமூகத்தில் விதவைத் திருமணத்தை ஆதரிப்பது தவறு என்றும், ஒருவனுக்கு ஒருத்தி என்ற உன்னதமான கருத்தை வலியுறுத்துவதாகவும் சாவித்திரி என்ற கதாபாத்திரம் அமைந்துள்ளது. மணமும் மரணமும் என்ற சிறுகதையில் பெண்களின் வளர்ச்சி நிலையானது, மிகவும் வேகமானது என்றும் திருமணத்திற்குப் பிறகு அவர்கள் கணவன், குழந்தை என்று குடும்பத்திற்காகவே வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றார்கள் என்பதைச் சராசா என்ற கதாப்பாத்திரத்தின் மூலம் வெளிப்படுத்தி உள்ளார் எம்.வி.வெங்கட்ராம். பெண்களைப் பற்றிக் கூறும்போது, “பெண்ணை மலருக்கு ஒப்பிட்டுப் பேசுகின்றார்களே அது மிக வாஸ்தவம். மலருவதற்கு முன் மொட்டு சில நாளாவது உயிரோடு இருக்கிறது. மணம் பெற்று மலர்ந்துவிட்டால் மலரின் ஆயுளும் விரைவில் முடிவை நெருங்கி விடுகிறது. மணத்துடன் மரணமும் மலரைத் தொடருகிறது. பெண்ணுக்கும் அப்படித்தான் சிறுமியாக இருக்கும்வரையில் அவள் குதூகலமாகத்தான் இருந்தாள். மணம் - அதாவது, புருசனும் மனைவியும் தர்மத்தின்

பங்காளிகள் என்று சொல்லி நடக்கிற திருமணம் நடந்த சிறு காலத்திலேயே மரணமும் அவளைப் பின் தொடருகிறது" என்று கூறியுள்ளார்.

வர்ணபேதம் எனும் சிறுகதையில் மனைவியைப் பிரிந்து வேறோரு பெண்ணுடன் வாழும் ஆண்களுக்கு ஏற்படும் சிக்கல்களும் பெண்ணிற்கு ஏற்படும் சிக்கல்களும் வெளிப்பட்டுள்ளன. திருமணமான ஒருவனை விரும்பி அவனுடன் வாழ்வது வந்த மேரி என்பவளின் மனநிலையை இக்கதையில் காணலாம். அற்பத்தனமானச் செயலை அறிந்துகொண்ட மேரி பிற்பகுதியில் வேறுவேறு பெண்ணின் வாழ்வைச் செம்மைப்படுத்த ரகுவை மறந்துவிட்டு வெளிஊருக்குச் சென்று விடுவது போல எம்.வி.வெங்கட்ராம் பெண்ணின் நல்லியல்பைக் காட்டியுள்ளார்.

கணப்பு என்ற சிறுகதையில் கணவரின் கடன் அதிகரித்து வீடு ஏலத்திற்கு வந்துவிட்டது. அந்த நேரத்தில் உதவியாக இருக்க வேண்டிய மனைவி தனது தாய்வீடு சென்று விடுவாள். அவனுடைய தந்தை இதனை அறிந்து இறந்து விடுவார். சில ஆண்டுகளுக்குப் பிறகு அவனுடைய மனநிலையை எம்.வி.வெங்கட்ராம் குறிப்பிடும்போது, "நான் அவளை மன்னிக்கத்தான் விரும்புகிறேன். அவள் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டால். மன்னிக்கத் தயார். ஆனால், அவள் அதை ஒப்புக் கொள்வாளா?" என்று கூறியுள்ளார். இதன் மூலம் அப்பெண்ணின் தீய இயல்பைச் சுட்டிக்காட்டியுள்ளார். மஞ்சுளாவின் சபதம் என்ற சிறுகதையில் மன்னர்களையும் செல்வர்களையும் கலைஞர்களையும் மஞ்சுளா அவளுடைய அழகில் மதி மயங்கிட செய்தவள். தனக்குச் சமமான பேரும் புகழும் உடைய துறவியைத் தன் அழகால் அவனுடைய மன உறுதியைக் கெடுக்க எண்ணிய மஞ்சுளா, இறுதியில் தன் தவறை உணர்ந்து தோல்வியுற்று அவளும் துறவியின் வழியைப் பின்பற்றுவாள் என்பதைக் கதையில் குறிப்பிட்டுள்ளார். இது போல தீய இயல்பு கொண்ட பெண்களும் கதையின் பின் பகுதியில் மாறிவிடும் நிலை எம்.வி.வெங்கட்ராம் சிறுகதைகளில் காணப்படுகிறது.

## ஆண்களின் நிலை

ஒழுக்கம் நிறைந்த ஆண்கள் வாழும் நாட்டில்தான் பண்புடைய பெண்களைக் காணமுடியும். மேலும், சமுதாயமும் செம்மையான நோக்கத்தை அடைய முடியும். எம்.வி.வெங்கட்ராம் சிறுகதைகளில் காணப்படும் ஆண்களின் பண்பு நிலைகளையும் அவர்கள் எத்தகைய சூழ்நிலையில் பண்பற்றவர்களாக மாறுகின்றார்கள் என்பதையும் இதன்மூலம் அறியலாம். வாழ வைத்தவன் என்ற சிறுகதையில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த பெண் பட்டு, அவளுக்கு அண்ணன் ஒருவன், தம்பி ஒருவன், தங்கைகள் இருவர். அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவதே மிகவும் கடினம். அவள் தாய் உண்டு, தந்தை இல்லை இறந்துவிட்டார். பட்டுவுக்கு உடல்நலம் சரியில்லாமல் படுத்த படுக்கையில் இருந்தாள். அவள் அழகுக் குறைந்து காணப்பட்டாள். பார்க்கும் மாப்பிள்ளைகள் விருப்பம் தெரிவித்ததே இல்லை. அவளுக்கு அவளுடைய முகத்தைப் பார்க்க விருப்பம் இருப்பது இல்லை. திருமணம் என்பது அவளுக்கு ஒரு கனவு போலத்தான் தோன்றியது. இதனை நன்கு அறிந்த அரசு வேலையில் உள்ள சந்தானம் என்பவன் பெண் பார்க்கச் சென்றபோது வரதட்சணை எதுவும் தேவையில்லை என்று திருமணம் செய்துகொண்டான். அதுவும் பார்ப்பவர் விரும்பும் அழகன் அவன். அவளுடைய வாழ்வைச் செம்மைப்படுத்த வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் அவள் உடல் நிலையை அறிந்து உடற்பயிற்சியின் மூலம் அவளை அழகுப் பெறச் செய்து ஓர்

ஆண்டு காத்திருந்து, அவளுடன் உடலுறவை வைத்துக்கொண்டு வாழ்ந்தான் என்று கதையில் எம்.வி.வெங்கட்ராம் சந்தானத்தின் பண்பு நலனைத் தெளிவுப்படுத்தியுள்ளார்.

தெரியாத அப்பாவின் புரியாத பிள்ளை என்ற கதையில் சட்டக் கல்லூரியில் சேர்ந்து படிப்பை முடித்து இடையில் ஏற்பட்ட ஆர்வத்தின் காரணமாகச் சில மாதங்கள் பத்திரிக்கைத் தொழில் செய்து வந்தவன் சந்திரன். அவன் தனது தந்தையின் சொல்லைக் கேட்டு ஒழுங்குடன் நடந்துகொள்வான். ஆனால், திருமணத்திற்கு மட்டும் தடை கூறினான். காரணம் கேட்டதற்கு மகாலட்சுமி அறிவிலும் குணத்திலும் அழகிலும் சிறந்தவள். அவளை நான் திருமணம் செய்துகொண்டால் அவளுடைய துணையாக வாழ முடியாது. எனவே, அவளுக்குப் பொருத்தமானவனாக ரகுராம் என்பவன் உள்ளான் என்றும் எனக்கு ஏற்றார்போல வேறொரு பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து வைக்கவும் என்று கூறுவான். இதன்மூலம் சந்திரனுடைய உயர்ந்த பண்பு இந்தச் சிறுகதையில் வெளிப்பட்டுள்ளது. இனி புதிதாய் என்ற சிறுகதையில் முதலாளி கொடுத்த ஆயிரம் ரூபாயை எடுத்துக்கொண்டு சரக்கு வாங்கி வரச் சென்னைக்குச் சென்றவர் ஓட்டலில் தங்கிடவே உணவு முதல் தங்கும் இடம் வரை வேலை, ஆள் என்ன செய்தவதென்று தெரியாமல் ஓட்டலில் வேலை செய்யும் பையன் வழிகாட்டிட இரவு சீட்டாட்டம் ஆட ஆரம்பித்தார். முதலில் அவருக்கு இலாபத்தைக் காட்டியது. பிறகு ஆசை மிகுதியால் விளையாடினார்.

அதன்மூலம்பணம்கழிந்ததே தெரியாமல் விளையாடி 600 ரூபாய் கைவிட்டு விடுவார். தன் அறையை நோக்கி வரும்போது அங்குப் பெண் ஒருத்தி உங்களுக்காகக் காத்திருக்கிறேன் என்று கூறிடுவாள். இரவும் கழிந்தது. காலை ஒன்பது மணிக்குக் குளித்த பிறகுதான் பித்த மயக்கம் தெளிந்தது. முதலாளிக்கு என்ன சொல்வது என்று நினைத்து வேறு ஊருக்கு டிக்கட் வாங்கிச் சென்றிடுவார். இக்கதையில் மூலம் பண்பற்றவரை வெளிப்படுத்தியுள்ளார். வேலைக்காரி தூங்குகிறாள் நாயும் காக்கிறது என்ற சிறுகதையில் செல்லத்தின் கணவர் திடீரென்று அவசர வேலையாக ஊருக்குச் சென்றுவிடுவான். அதனை அறிந்த அவனுடைய மேலதிகாரியானச் சேகரன் செல்லத்தின் விட்டிற்கு வந்தான். திருமணம் ஆவதற்கு முன்பு கல்லூரியில் படித்தவர் ஒருவரை ஒருவர் நேசித்தனர். இருவரும் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தார்கள். ஆனால், சேரனின் தந்தையார் வசதியான இடமாகப் பெண் பார்த்து திருமணம் செய்து விட்டார். பிறகுச் செல்லத்திற்குத் திருமணம் முடிந்தது. செல்லத்திற்கு இரண்டு குழந்தைகள். மிகவும் சந்தோசமாக வாழ்ந்து வந்தாள். முதலில் வருத்தம் இருந்தாலும் பிறகுக் கணவனைப்புரிந்துகொண்டு நல்லபடியாக வாழ்ந்து வந்தாள். தனது கணவனுக்கு மேலதிகாரியாகச் சேகரன் என்று அறிந்திருந்தாள். ஆனால், அவள் இவ்வாறு கணவன் இல்லாத நேரத்தில் வருவான் என்று எதிர்பார்க்கவில்லை. அவன் தவறான மனநிலையை அறிந்து வீட்டில் இருந்து வெளியே அனுப்ப முற்படுவாள். ஆனால், அவன் போவதாகத் தெரியவில்லை. கணவர் வீட்டில் இல்லை என்பதைத் தெரியாதவன் போலவும் விடுமுறை கடிதம் பார்க்காதவன் போலவும் பேசினான். எனவே, வீட்டில் உள்ள அனைத்து விளக்குகளையும் போட்டாள். அதனை அறிந்த சேகரன் கேட்பதாவது, "இத்தனை லைட்டுகள் எதற்குச் செல்லம்? அனாவசியமாகக் கரண்ட்" எனக்கு இருட்டு பிடிக்காது இருட்டில் உட்கார்ந்து பேசினால்எனக்குமூச்சுத்திணறும்..." என்றாள். செல்லம் புன்னகையுடன்" இரண்டு குழந்தைகள் பெற்ற பிறகும் செல்லம் அழகாக உள்ளாள் என்று மனதில் பல்வேறு எண்ணங்களுடன் பேசினான். அதனை அறிந்த செல்லம் விட்டில் குழந்தைகள்தவிர வேலைக்காரி தூங்குகிறாள். நாய் ஒன்றும் உள்ளது என்று

பயத்தை ஏற்படுத்தினாள். இக்கதையின் மூலம் சேகரனின் பண்பற்ற நடத்தையை எம்.வி. வெளிப்படுத்தியுள்ளார்

### சிறுவர்கள் நிலை

எம்.வி.வெங்கட்ராம் சிறுகதைளில் சிறுவர்கள் மையமாகக்கொண்ட கதைகள் ஒரிரு கதைகளே அமைக்கப்பட்டுள்ளன. அதிலும் சிறுவர்களுக்குரித்தான மனநிலையைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். அஞ்சனா என்ற சிறுகதையில் தந்தையின் சட்டையில் இருந்து அவருடைய மகன் பணத்தைத் திருடிவிட்டு மறைப்பது போல கதையை அமைத்துள்ளார். அவனைக் கேட்டுக் தண்டிக்கும்போது அவரும் சிறுவயதில் இதுபோல வேலைகளைச் செய்தது நினைவுப்படுத்தப்படுகிறது. இதனைப்போல பைத்தியக்காரப் பிள்ளை என்ற கதையும் சிறுவர்களை மையமாகக் கொண்டது.

### குடும்ப நிலை

தனிமனிதர்கள் ஒன்று சேர்ந்து உருவாக்குவது தான் குடும்பம். சமுதாய அமைப்பில் குடும்பம் உயிர் நாடியாக விளங்குகிறது. பல குடும்பங்களின் இணைப்பே சமூகமாகும். எம்.வி.வெங்கட்ராம் சிறுகதைகளில் குடும்பங்களின் நிலையும் அவற்றில் காணப்படும் சிக்கல்களையும் ஆய்வோம். வரவும் செலவும் என்ற சிறுகதையில் சென்னப்பன் கூலிக்குத் தொழில் செய்து வந்தான். கடவுள் கொடுத்த கை கால்கள் திடமாக இருக்கும் வரை உழைத்துச் சாப்பிடுவோம் என்ற மனநிலையை உடையவன். அவன் இருநூறு ரூபாய் கடன் வாங்கி கெங்கம்மாள் என்பவளைத் திருமணம் செய்து கொண்டான். அவளும் நெசவு வேலைகளில் கெட்டிக்காரி. ஓராண்டுகளில் கடன் அடைவதற்கு முன்பே பெண் குழந்தை பிறந்தது. பிறகு உடல் நலம் சரியில்லாமல் இருமல், வாந்தி, வயிற்றுப் போக்கு என அவளைத் தொடர்ந்து வாட்டியது. இரண்டாவதும் மூன்றாவதும் குழந்தை இறந்து பிறந்தன. அடுத்ததாக, ஒரு பெண் குழந்தை பிறந்து கெங்கமாள் குழந்தையுடனும் சென்னப்பன் கடனுடனும் போராடினார்கள். இறுதியில் கெங்கம்மாள் இறந்துவிட்டாள். அவளுடைய இறுதிச்சடங்கு நடத்தப் பணம் இல்லாமல் அவதிப்படுவான். குழந்தையை மேரிமாதா கோயிலுக்குக் கொடுத்துவிட்டு அப்பணத்தில் இறுதிச்சடங்கு நடத்துவான். இதன்மூலம் திட்டமிடாத குடும்ப வாழ்வானது சிக்கல் நிறைந்ததாகவே காணப்படும், மனம் தளராமல் வாழும் வாழ்வே செம்மையை அடையும் என்பது புலப்படுகிறது.

ராஜ குடும்பம் என்ற சிறுகதையில் குழந்தையின் உடல்நலம் சரியில்லை என்பதை அறிந்து மருந்து கொடுத்து இரவு முழுவதும் உறக்கம் இல்லாமல் பார்த்துக் கொள்வாள். மனைவி. கணவன் அதனை அறிந்து மனைவியின் விருப்பு வெறுப்புகளைப் புரிந்து நடந்துகொள்வான். இதன்மூலம் குடும்பத்தில் ஆணும் பெண்ணும் விட்டுக் கொடுத்து வாழவேண்டும் என்பதை எம்.வி. வெங்கட்ராம் வெளிப்படுத்தியுள்ளார். பைத்தியக்காரப்பிள்ளை என்ற சிறுகதையில் பொறுப்பற்ற கணவனும் மனைவியும் ஐந்து ஆண் குழந்தையும் ஐந்து பெண் குழந்தையும் பெற்றெடுத்து விடுவார்கள். கணவன் ஒருநாள் எப்படி குழந்தைகளைக் காப்பாற்றுவது என்று தெரியாமல் இருக்கின்றோம் என்பான். அதற்கு மனைவி, “நீங்க ஒன்றும் கலியாணம் பண்ணிக் கழிக்க வேணாம் அவுங்க அவுங்க தலை எழுத்துப்படி நடக்கும் நீங்க ஒன்னும் கவலைப்பட வேணாம் என்றாள். அவன் நான் எப்படி கவலைப்படாம இருக்கமுடியும் நீ பொம்பிளே வீட்டிலே உட்கார்ந்து பேசுவே தெருவில் நாலு பேருக்கு முன்னாடி போறவன் நான் இல்லே. குதிராட்டம் பெண்ணுங்க கல்யாணத்துக்கு நிக்குதுன்னு என்னையில்லே கேப்பாங்க?” என்பான். கதையின் பிற்பகுதியில் தந்தை இறந்து விடுவான்.

பிள்ளைகளின் வாழ்வு கோள்விக்குறியாக மாறியது. இதன் மூலம் எம்.வி. திட்டமிட்ட குடும்ப வாழ்வை வலியுறுத்துகிறார். பொறுப்பற்ற குடும்பங்கள் சமுதாய நலனை அழித்துவிட வழி கோலுகிறது.

### சமுதாய நிலை

அரசு, கல்வி, தொழில், சமயம் என்ற கூறுகளைப் பற்றியும் எம்.வி.வெங்கட்ராம் சிறுகதைகளில் அமைத்துள்ள நிலைகளைச் சமுதாய நிலை என்ற தலைப்பின் கீழ் ஆய்வோம். சமுதாயம் எவ்வாறு இயங்குகிறது என்று மீனாட்சி முருகரத்தினம் குறிப்பிடும் போது, குடும்பம் அதற்கு ஒரு தலைவன் குழந்தைகள் அந்த முக்கட்டினை இணைக்கும் பாசபிணைப்பு. அப்பிணைப்பினால் வரும் பொறுப்புகள், ஆசைகள், துன்பங்கள், நம்பிக்கைகள், நல்வாழ்வுகள் இப்படி ஒரு நெறிமுறையுடன் இயங்குகிறது சமுதாயம் என்று கூறியுள்ளார்.” இந்திரஜாலம் என்ற சிறுகதையில் எம்.வி. மக்களின் வாழ்க்கை நிலையும் சமுதாயத்தின் நிலைகளைப் பற்றியும் அரசாட்சி செய்பவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதை உணர்த்தி உள்ளார். மேலும், இக்கதையின் மூலம் காலத்தைக் கணக்கிடுவது மனத்தைப் பொறுத்தே அமைகின்றது என்பதை இக்கதைகள் மூலம் அறியலாம். இக்கதைகள் சமுதாயத்தின் கூறுபாடான அரசு பற்றியும் சமுதாயம் நெறிமுறையுடன் இயங்கக் குடும்பம் குழந்தைகள், பாசப் பிணைப்புகள், நம்பிக்கைகள், ஆசைகள், துன்பங்கள் என்ற இயல்பு நிலைகளைப் பற்றியும் அமைக்கப்பட்டுள்ளன. சாவித்திரி என்ற சிறுகதையில் சமுதாயப் பொறுப்புடன் செயல்பட வேண்டிய சட்டக் கல்வி படித்து முடித்து அரசாங்க வக்கீல் பணிபுரியும் சீனிவாசய்யர் சமுதாய முன்னேற்றத்தை மனதில்கொள்ளாமல் அவருடைய சுயநலத்திற்காகக் குடும்பம், சட்டம், அரசு தொழில் என்ற அமைப்புகளை நெறியற்ற முறையில் செயல்படுத்தினார். அதன் மூலம் சமுதாய நிலைகளில் செம்மையான நோக்கத்தை அடையமுடியாது என்பதை வெளிப்படுத்தி உள்ளார்.

### தொகுப்புரை

எம்.வி.வெங்கட்ராம் சிறுகதைகளின் தனிமனித நிலைகளையும், குடும்ப நிலைகளையும், சமுதாய நிலைகளையும் காணும்போது அவற்றில் அமைந்துள்ள சிக்கல்கள் அவற்றுகானத் தீர்வுகளும் சமுதாய நோக்கம் வெற்றியடைய வழி வகுப்பதாகவே அமைந்துள்ளன. சமுதாயத்தில் செயல்படவேண்டும் என்பதும் ஒவ்வொரு தனிமனிதனும் இதனை மனதில் கொண்டு வாழ வேண்டும் என்பதே எம்.வி.வெங்கட்ராம் கருத்து என்பதை அறிய முடிகிறது.

### குறிப்புகள்

1. வெங்கட்ராம். எம். வி, கதைகள் - மணமும் மரணமும், ப 350.
2. வெங்கட்ராம். எம். வி, கதைகள் - கணப்பு, ப 42.
3. வெங்கட்ராம். கதைகள் - வேலைக்கரி துங்குகிறாள் நாயும் காக்கிறது, ப 746.
4. வெங்கட்ராம். எம். வி, கதைகள் - பைத்தியகார பிள்ளை, ப 575.
5. மீனாட்சி முருகத்தினம், கல்கியின் சிறுகதை கலை, ப 74.